DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

## DVC.No.10/2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | லோகநாயகி | Taluk | |
| Husband's Name | ரவி | Village | |
| Age | 54 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 26.**06.2025.** | | | |

( Respondent present )

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

எனக்கும், எதிர்மனுதாரருக்கும் 1998 ஆம் ஆண்டு பண்ருட்டி ஜோதி திருமண மண்டபத்தில் எனது முழு சம்மதத்துடன் திருமணம் நடைபெற்று பண்ருட்டியில் அதன் பின்னர் 5, 6 வருடங்கள் எனது கணவர் வீட்டில் மாமியார், மாமனார், நாத்தனார் மற்றும் நாத்தனார் மகன் ஆகியோருடன் ஒன்றாக அதே வீட்டில் குடித்தனம் செய்தேன். நான் திருமணத்திற்கு முன்பு பிறருக்கு தையல் கலை கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். என்னை திருமணம் செய்த சமயத்தில் எனது கணவர் சென்னையில் வேலையில் இருந்தார் என்றால் சரிதான். எனது கணவர் அவரது வீட்டிற்கு ஒரே மகன் என்றால் சரிதான். தற்போது எனது மாமனார் மற்றும் மாமியார் இருவரும் இறந்து விட்டனர். எனக்கு திருமணம் நடந்த சமயத்தில் எனது மாமியார், மாமனாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 50 வயதிருக்கும். எங்கள் திருமணம் முடிந்த புதிதில் எனது கணவர் சென்னையில் இருந்து ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை பண்ருட்டி வந்து எங்களை பார்த்து செல்வார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி எனது மாமியார் வீட்டில் இருந்தபோது அவர்களுக்கான எந்த ஒரு பணிவிடையும் மருமகள் என்கிற முறையில் நான் செய்யவில்லை என்றாலும் நான் நிர்பந்தித்ததின் பேரில் எனது கணவர் என்னை தனிக்குடித்தனம் அழைத்துக்கொண்டு சென்னை சென்றார் என்றாலும் சரியல்ல, நான் தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று கேட்கவில்லை என் கணவர் தான் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி என்னை சென்னைக்கு அழைத்து சென்று தனிக்குடித்தனம் வைத்தார். நான் தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று கேட்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எனது கணவர் தான் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி என்னை சென்னைக்கு அழைத்து சென்று தனிக்குடித்தனம் வைத்தார் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவருக்கு உடல்நிலை நல்லபடியாக இருந்திருந்தால் நான் சென்னைக்கு தனிக்குடித்தனம் செல்லாமல் எனது புகுந்த வீட்டிலேயே தான் இருந்திருப்பேன் என்றால் சரிதான்.

எனது கணவருக்கு நீரிழிவு நோயும், மன அழுத்தமும் இருந்ததினால் நான் எங்களுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு குறைவு என்று கூறி , எனது கணவரை வார்த்தைகளால் துன்புறுத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரிடம் அவருக்கு குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறியதினால் அவர் என்னை அடித்தார் என்று எனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் எதுவும் உண்மையாக நடக்கவில்லை என்றாலும், உண்மையாக அவ்வாறு ஏதேனும் நடந்திருந்தால் நான் காவல் நிலையத்தில் அது குறித்து புகார் அளித்திருப்பேன். எனவே வழக்கிற்காக என் கணவர் என்னை அடித்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் என்னை பலமுறை அவ்வாறு அடித்திருக்கிறார். கணவன், மனைவிக்குள் நடக்கும் இதுபோன்ற சண்டை, சச்சரவுகளை பெரிது செய்ய வேண்டாம் என்று கருதி, நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. சென்னையில் எனது கணவருடன் நான் குடித்தனம் செய்யும் காலத்தில் எனது தம்பி எங்களுடன் தான் வசித்தார் என்றால் நிரந்தரமாக அவர்கள் வசிக்கவில்லை என் கணவர் கேட்டுக்கொண்டதன் பேரில் சிறிது காலம் எங்களுடன் தங்கினர். அதுவும் எனது தம்பி பிரசாந்த் மட்டும் அவருக்கு சென்னையில் தங்குவதற்கு ரூம் எதுவும் இல்லை என்று கூறியதால் எனது கணவர் அவரை எங்களுடன் வந்து இருக்கச்சொல்லி சொன்னதனால் ஒரு மாதத்திற்கும் குறைவிலான நாட்கள் தான் தங்கி இருந்தார். சென்னையில் இருந்து பாண்டிச்சேரிக்கு எனது கணவர் வேறு வேலையில் சேர்ந்ததனால், நாங்களும் குடித்தனத்தை பாண்டிச்சேரிக்கு மாற்றினோம். அங்கு 3,4 வருடங்கள் தங்கி இருந்தோம். நாங்கள் பாண்டிச்சேரியில் இருந்தபோது என் தம்பி பாபு எங்களுடன் வந்து தங்கி இருந்தாரா என்றால் எனது கணவர் குடித்துவிட்டு என்னை அடிக்கடி அடித்து துன்புறித்தியது பற்றி நான் எனது வீட்டில் கூறும்போது அவ்வப்போது எனது பாதுகாப்பிற்காக எனது தம்பி எங்களுடன் வந்து தங்குவார். எனது கணவருக்கு குடிப்பழக்கம் இல்லை என்றாலும், அவர் என்னை அடித்து துன்புறுத்தியதே இல்லை என்றாலும், எங்களுக்கு பிள்ளை இல்லை என்பதனால் எனது தம்பிகளை பிள்ளைகள் போல் நினைத்து எங்களுடன் வந்து எனது கணவர் தங்க சொன்னார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக அவர் மீது மேற்படி குற்றசாட்டுகளை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் என்னை குடித்துவிட்டு அடித்த சமயங்களில் நானோ, எனது தம்பிகளோ அவர் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் நான் வீட்டை விட்டு வெளியே சென்று காவல் நிலையத்தில் புகார் அளிக்கும் அளவிற்கு எனக்கு தைரியம் இருந்தது இல்லை. மேலும் எனது தம்பிகளின் மூலமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முயன்றால் எனது தம்பிகளை கொலை செய்துவிடுவதாக எனது கணவர் என்னை மிரட்டி, துன்புறுத்தி உள்ளார். எனவே தான் அவ்வாறு புகார் எதுவும் நாங்கள் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. எனது குடும்பம் பெரிது என்பதனாலும், எனது குடும்பத்தாரை பார்த்து எனது கணவர் தான் பயப்படுவார் என்றாலும், எனது கணவர் என்னை அச்சுறுத்தியதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.